MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்

The Costruct of the Ethnic Group in Nunvelikkirakanankal

Dr. N. Rathinakumar[1], Mr.M. karthikesan[2]

Assistance Professor in Tamil[1], Research Scholar in Tamil[2], The Madura college, Madurai

Manuscript ID : **MT360018**

Volume : **1**

Issue : **2**

Month : **December**

Year : **2021**

Received: 28.12.2021

Revised: 30.12.2021

Accepted: 31.12.2021

Published: 31.12.2021

Pages : 33-46

ABSTRACT:

Thoughts on the migration, generation, and living conditions of each community are recorded in different ways. Literature that has been recorded as histories since the origin of prose is found. In particular, the novels are found to speak of the biographies of ethnic groups based on history in Tamil. It is emerging as a major form of Tamil novels. Such novels tell the story of the history of ethnic groups. S. Venugopal's Nuṇveḷikkirakaṇaṅkaḷ encapsulate the cultural ethnography of the capillary monologue. This article focuses on them.

KEYWORDS:

Ethnography, ethnic groups, anthropology, cultural graphics, commentaryords.

REFERENCES :

1. S . Venugopal, 2017, Nuṇveḷikkirakaṇaṅkaḷ Tamilini, Chennai - 51.
2. A. Sivasubramanian, 2016, History Of Subalterns, p.5, New Century Book House (P) Ltd., Chennai-96.
3. Ranjit Kuha, Susidaru, 2016, Tejaswini Niranjana; Struggles of marginalized people, p.39, Kalachuvadu, Nagercoil - 01.
4. Na. Vanamamalai, 2007, Tamil History and Culture, p.39, New Century Book House (P) Ltd., Chennai-96.
5. DD Kosambi, 2018, Ancient India, p.47, New Century Book House (P) Ltd, Chennai-96.
6. Su.Shanmugasundaram, 1991, Regional Novels in Tamil, p.6, Kavya, Bangalore.
7. Noburu Karoshima, 2014, Historical Southern Society, p. 87, Translation Center, Pollachi - 642 003.
8. Bhagwatsalabharati, 2014, Literary Anthropology, p.18, Identity Publishing, Puthanatham,
9. Above, p.21.
10. Karthikeyu Sivathambi, 2010, Ancient Tamil Society, p.23, New Century Book House (P) Ltd., Chennai-96.
11. A. Sivasubramanian, 2016, Basement People's History, p.124, New Century Book House (P) Ltd., Chennai-96.

மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
தொகுதி-1 பதிப்பு-2 டிசம்பர் 2021 | E-ISSN: 2583-0449

நுண்வெளிக்கிரகணங்கள் கட்டமைக்கும் இனக்குழு வாழ்வியல்

முனைவர் ந. இரத்தினக்குமார்[1], ஆய்வாளர் மெ. கார்த்திகேயன்[2]

உதவிப் பேராசிரியர்[1], முனைவர் பட்ட ஆய்வாளர்[2],

மதுரைக் கல்லூரி, மதுரை

கட்டுரைச் சுருக்கம்

ஒவ்வொரு சமூகத்தின் இடப்பெயர்வு, தலைமுறை, வாழ்வு நிலை ஆகியனவற்றைப் பற்றிய சிந்தனைகள் பல்வேறு வகையில் பதிவு செய்யப்படுகின்றன. உரைநடை தோற்றத்திற்குப் பின்னர் வரலாறுகளாகவே பதிவு செய்யப்பட்ட இலக்கியங்கள் காணப்படுகின்றன. அதிலும் குறிப்பாக தமிழில் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டும் இனக்குழுக்களின் வாழ்வியலைப் பேசுவதாக நாவல்கள் காணப்படுகின்றன. தமிழ் நாவல்களில் இது பிரதானமான வடிவமாக உருவாக்கம் பெற்று வருகிறது. இத்தகைய நாவல்கள் இனக்குழுக்களின் வரலாற்றைப் பற்றி செய்திகளைக் கூறுவனவாக அமைகின்றன. சு.வேணுகோபாலின் நுண்வெளிக்கிரகணங்கள் காப்பிலிக ஒக்கலிகரின் பண்பாட்டு இனவரைவியலை கதைகளாகப் பொதிந்து அடுக்கியுள்ளது. அவற்றை இக்கட்டுரை கவனப்படுத்தியுள்ளது.

கருச்சொற்கள்

இனவரைவியல், இனக்குழுக்கள், மானிடவியல், பண்பாட்டு வரைவியல், எடுத்துரைப்பு

முன்னுரை

மனிதர்கள் தமக்கான வரலாற்றை தாமே எழுதிக் கொள்வதற்கு வழிவழியான அறிவுமுறைகள் ஒவ்வொரு இனக்குழுவிலும் செயல்படுகின்றன. தொழில் செய்யும் போதும், தாலாட்டும் போதும், இறப்பின் போதும் அவர்களின் வரலாற்றுச் செய்திகள் இடம்பெறுவதைக் காணலாம். இவையாவும் முறையான எழுதுமுறையன்று என்ற போதிலும் இத்தகைய பாடல்கள், சொல்கதைகள், சொலவடைகள், பழமொழிகள் ஆகியனவற்றிலிருந்தும் வரலாற்றுச் செய்திகள் கண்டுணரப்படுகின்றன. அடித்தள மக்கள் வரலாறென இதனைக் குறிப்பர். இந்திய வரலாறு உயர்குடியினரின் வரலாறென்றும் குறிப்பிட்ட ஒரு வகுப்பினரே ஆதிக்கம் செலுத்தும் வரலாறென்றும் கூறப்பட்ட நிலையில் அவ்வாறான வரலாறுகளைக் கடந்து மக்களின் வரலாற்றை

எழுதும் சிந்தனை முறைகள் உருவாயின. இனக்குழுக்களின் வரலாறுகள் யாவும் முறையற்ற வரலாற்றுச் செய்திகளைக் கொண்டிருந்தாலும் அதுவே மக்களின் வரலாறாக பரிணமிக்கிறது. இனவரைவியல் தரவுகள் இது போன்ற வரலாற்றையும் பதிவு செய்கின்றனவாக அமைகின்றன.

இனவரலாறும் பண்பாட்டு வரலாறும்

மன்னர்களின் போர்களையும் அவர்களது வாழ்க்கை நிகழ்வுகளையும் வரிசைப்படி எழுதினால் அதுவே வரலாறு என்ற நிலையினை பின் அமைப்பியல் சிந்தனைகள் மாற்றின. மக்களுக்கான வரலாறுகள் அவர்தம் சொல்கதைகளிலும் வேறு பல வடிவங்களிலும் கிடைக்கின்றன. அவற்றிலிருந்து அவர்களுக்கான வரலாறு எழுதப்படல் வேண்டும் என்பதை உரையாடலாக மாற்றினர். "ஒரு நாட்டின் வரலாறு என்பது பாராளுமன்றத்திலோ, போர்க்களங்களிலோ இல்லை. ஆனால் விழா நாட்களிலும், சந்தை நாட்களிலும் மக்கள் தங்களுக்குள் என்ன கூறிக் கொள்கிறார்கள் யாத்திரை போகிறார்கள் என்பதில் இருக்கிறது" [1] என்கிறார் ஆ.சிவசுப்பிரமணியன். மக்களின் வரலாறுகள் அவர்களின் பல்வேறு வாய்மொழித் தரவுகளில் காணப்படுகின்றன என்கிறார். அவற்றைத் தொகுத்து ஆவணப்படுத்த வேண்டும் என்பதை பிற்கால வரலாற்றெழுதியல் உத்திகளில் ஒன்றாகக் கருதுகின்றனர் இனவரைவியல் ஆய்வாளர்கள். வரலாறென்பது பல்வேறு தரவுகளைக் கொண்டு கட்டமைக்கப்படுவதாகும். அதில் மக்கள் வாழ்வியல் சார்ந்து அவர்தம் கலைகள், மொழியாடல்கள் ஆகியனவற்றைக் கொண்டு வரலாற்றைக் கட்டமைத்தலும் ஒன்றாக இருக்கின்றது. இனவரைவியல் ஆய்வாளர்கள் நேரடியாக மக்களிடம் சென்று அவர்களிடம் உள்ள வாய்மொழித் தரவுகளைச் சேகரிக்கின்றனர். வரலாற்று ஆதாரங்களாக அவை பயன்படுத்தப்படுகின்றன. "ஒரு சராசரியான இந்திய வரலாறு எழுதுதலுக்கு அரசியல் போதாது. ஏனெனில் அது நமக்கும் நமது கடந்த காலத்திற்கும் இடையில் உள்ள உரையாடலைத் தடை செய்கிறது. அது அரசின் ஆணையிடும் குரலில் நம்மிடம் பேசுகிறது. நமக்குரிய வரலாற்றுக் கட்டத்தை நியமிக்கும் செயலை அது தானே எடுத்துக் கொள்கிறது" [2] என்று அதிகார வர்க்கத்தால் உருவாக்கப்படும் வரலாறுகள் மக்களின் வரலாறாக மாறாமல் இருப்பதை எடுத்துரைக்கிறார் ரணஜித் குஹா. மக்களின் வரலாறு மக்களால் பேசப்படுகிற வரலாறாக அவர்களால் கூறப்பட்ட வரலாறாகவே இருத்தல் வேண்டும். அத்தகைய வரலாற்று வரைவியலைத்தான் மானிடவியல் கொண்டிருக்கிறது. தொன்மையான சமூகங்களைக் கொண்டு நடப்புச் சமூகங்களை அறிந்து கொள்ளலாம் என்பதைப் போல் தொன்மையான சமூகங்களை அறிந்து கொள்ளுதல் இன்றியமையாததாகிறது. ஒவ்வொரு சமூகத்திற்கும் உள்ள தனித் தனி வரலாறுகள் தொகுக்கப்பட வேண்டும். இனக்குழுக்களின் வரலாறாக அது பரிணமிக்கும் எனலாம். அத்தகைய வரலாறுகளை

நவீன நாவல்களில் காணமுடிகிறது. ஒரு குறிப்பிட்ட இனத்தினைக் குறித்த நாவல் அவ்வினத்தின் குறுகிய கால வரலாற்றை எடுத்தியம்புவதாக அமைகிறது. நுண்வெளிக்கிரகணங்கள் கன்னடத்தை தாய்மொழியாகக் கொண்ட காப்பிலிய ஒக்கலிகர்களின் வரலாற்றை எடுத்துரைக்கிறது.

மனிதர்கள் தொடர்ந்து மாறுதலுக்கு உள்ளாவது இயற்கையின் நியதியாகும். பண்பாட்டு நிலையில் உயர்வை அடைவதென்பது சமூகத்தின் வளர்ச்சியாகக் கூறப்படுகிறது. தொடக்ககால மக்களிடமிருந்த கருவிகள் மேம்படும் போது புதிய தொழில்நுட்பத்துடன் புதிய சமூகம் உருப்பெறுகிறது. முந்தைய சமூகத்தின் எச்சங்களைக் கொண்டிருப்பதாகவும் அது அமைகிறது. தொல்பழங்காலத்து மனிதர்களின் செயல்பாடுகளைக் கொண்ட பழங்குடிகள் இன்றும் வாழ்கின்றனர். அவர்களிடமிருந்து பழங்காலத்திய பண்பாட்டு, நாகரிக வரலாற்றினை அறிந்துகொள்ளலாம். ஒரு சமூகத்தின் வரலாறானது ஒரு சில ஆசிரியர்களைக் கொண்டு மட்டும் அமையக் கூடாது. அது பல்வேறு சமூக விஞ்ஞானங்களைக் கொண்டு எழுதப்பட வேண்டும் அப்போதுதான் உண்மையான வரலாற்றை நோக்கிய நகர்வினை அடைய முடியும் "வரலாறு ஒரு சமூக விஞ்ஞானம். அது பல விஞ்ஞானிகளின் துணையோடு எழுதப்பட வேண்டும். மானிட இயல், அகழ்வு ஆராய்ச்சி, காசு ஆராய்ச்சி, சமூக இயல், அரசியல், பொருளாதாரம் ஆகிய விஞ்ஞானங்களின் துணையோடு வரலாறு எழுதப்பட வேண்டும். இலக்கியமும் கலைகளும் சமூக வளர்ச்சிக் கண்ணோட்டத்தில் சரித்திரம் எழுதத் துணையாகும்" [3] என்று குறிப்பிடுகிறார் நா.வானமாமலை. கலை இலக்கியங்களும், மானிட இயல் ஆய்வுகளும் ஒரு சமூகத்தின் வரலாற்றை அறியத் துணை செய்கின்றன என்பதை இதிலிருந்து அறியலாம். பண்பாட்டு வரலாறு என்பது சமூக வளர்ச்சியின் வரலாறாகும். ஒவ்வொரு சமூகமும் வளர்சிதை மாற்றத்திற்கு உள்ளாகும் என்பது இயல்பான நடைமுறையாகும். இவையாவும் ஒவ்வொரு சமூகத்திலும் கதைகள் வடிவில் காணப்படக் கூடும். அவற்றை நுணுகி ஆராய்ந்து அவர்தம் பண்பாட்டு வரலாற்றினை மீட்டெடுத்தல் இன்றியமையாத பணியாகும். "ஒரு குறிப்பிட்ட காலத்தில் மனிதன் உண்மையில் எப்படி வாழ்ந்தான் என்பதைத் தொல்பொருளாய்வாளர் கண்டுபிடித்தவற்றை மட்டும் வைத்துக் கூறுவதில்லை. அவ்வாழ்க்கை முறையைக் (முழுமையான பண்பாட்டினை) கண்டுபிடிப்பதற்கு உலகில் எங்கோ மூலை முடுக்குகளில் இன்னமும் எஞ்சியுள்ள பல்வேறு பழங்குடி மக்களை ஒப்பிட்டு ஆராய்வது அவசியமாகும்" [4] என்ற டி.டி.கோசாம்பியின் கூற்றானது மனிதச் சமூகப் பண்பாட்டு வரலாற்றை அறிந்து கொள்வதற்கு முந்தைய காலத்து பண்பாட்டினைக் கொண்ட பழங்குடிகளின் வரலாற்றினை அறிந்து கொள்வதன் மூலம் வரலாற்றுக்கு முந்தைய மனிதனின் பண்பாட்டினை அறிந்து

கொள்ளலாம். அது போன்ற இனக்குழுக்கள் இன்றைக்கும் தமிழகத்தில் வாழ்ந்து வருகின்றனர். அவர்தம் பண்பாட்டு வரலாறானது அவர்தம் வாழ்வியலில் கதைகளாகக் கூறப்படுகின்றன. தமிழில் தோன்றிய வட்டார இலக்கியங்கள் ஒவ்வொரு இனக்குழுக்களின் வாழ்வையும் பதிவு செய்தன. அவற்றில் அவ்வினக்குழுக்களின் பண்பாடும், நாகரிகமும், வரலாறும், தொல்கதைகளும் கூறப்பட்டுள்ளன. "ஒரு கதை எந்த இடத்தில் நடப்பதாகக் காட்டப்படுகிறதோ அந்த இடத்தைத் தவிர வேறு இடத்தில் அது நடந்திருக்க முடியாது என்றும் அந்தக் குறிப்பிட்ட இடத்தில் வாழ்ந்திருப்பவரேயன்றி பிறிதொருவர் அதை எழுதி இருக்க முடியாது என்றும் கருதுகிறாற் போல அந்தக் கதையின் இனவமைதியும் பின்னணியும் அமையுமானால் அக்கதை வட்டார வண்ணம் உடையது" [5] என்ற கூற்றனாது வட்டார நாவல்களின் தன்மையினை வெளிக்கொணர்வதாய் அமைகிறது. தமிழகத்தில் வெவ்வேறு வட்டார நாவல்கள் காணப்படுகின்றன. அவை முழுமையான இனவரைவியல் தரவுகளை உடையனவாக இல்லாவிட்டாலும் புனைவோடு கூடிய தரவுகளாகக் கருதத்தக்கனவாகும். இனவரைவியல் சார்ந்து நூலாசிரியர் படைத்திருக்கா விட்டாலும் அவரது சிந்தனையானது அவர் வாழும் குறிப்பிட்ட வட்டாரத்தை முழுமையான அறிந்திருப்பதினின்றும் வெளிப்படுவதால் இந்நூலாசிரியரை இனவரைவியல் தன்மையுடன் அணுகி அந்நாவலிலிருந்து அச்சமூக மக்களின் பண்பாட்டு வரலாற்றைக் கண்டுணரலாம்.

வரலாற்று இனவரைவியல்

பண்பாட்டு வேறுபாடுகளைக் கொண்ட இனக்குழுச் சமூகங்களின் வரலாறானது ஒரே விதமானதாக இருக்க இயலாது. வெவ்வேறு தனித்தனிக் கூறுகளுடன் வேறுபட்டு அமைவதே இயல்பாகும். இனவரைவியல் ஆய்வாளர்கள் இனக்குழுக்களின் வரலாறுகளை அம்மக்களின் பல்வேறு மொழியாடல்களின் வழியே உய்த்துணர முற்படுகின்றனர். வரலாற்றியலாளர்கள் தமிழகத்தில் நிலவி வந்த கிராம நிர்வாக அமைப்பிற்கு தனித்தனிச் சேரிகள் பகுக்கப்பட்டு இருந்தமையை சுட்டிக் காட்டுகின்றனர். அச்சேரிகள் ஓர் ஊரின் பல இனக்குழுக்கள் ஒன்றிணைந்து வாழ்ந்தாலும் அவர்கள் வாழும் பகுதி ஒன்றுக்கொன்று வேறுபட்டு அமைகின்றன என்பதைச் சுட்டுவதாக அமைந்துள்ளது. "தஞ்சையில் மூன்று ஊர்களில் குடியிருக்கை காணப்படுகிறது. குடி என்ற சொல்லுக்கு ஒரு குடும்பம் அல்லது மக்கள் தொகுதி என்று பல வகையில் பொருள் கொள்ளலாம். மேற்கூறப்பட்ட மூன்று ஊர்களில் குடியிருக்கையுடன் ஊர் நத்தமும் பறைச்சேரியும் இருந்துள்ளன. எனவே இவ்விடத்தில் குடி என்பது குத்தகைதாரராக உள்ள உழுகுடிகளைக் குறிப்பிடலாம். இவர்கள் பொருளாதார சமூக நிலைகளில் ஊராரிலிருந்தும் பறையர்களிலிருந்தும்

வேறானவர்கள்”[6] என்று குறிப்பிடுகின்றார் நொபுரு கரோஷிமா. இதிலிருந்து பண்பாட்டு நிலையில் உற்பத்தி உறவுகள் அடிப்படையில் கிராம சமூகம் தனித்தனிப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளமையைக் காணலாம். இதே போன்ற தன்மையில்தான் இலக்கிய ஆக்கங்களிலும் ஒவ்வொரு இனக்குழுவும் அதன் வாழிடம் சார்ந்து பகுக்கப்பட்டுள்ள தன்மையினைக் கொண்டுள்ளது. சமூகவியல் ஆய்வாளரான ஐராவதி கர்வே மகாபாரதக் கதையினை மானிடவியல் நோக்கில் அணுகினார். இது போல் இராமாயணக் காப்பியத்தையும் இனவரைவியல் நோக்கில் ஆய்வு செய்த ஆய்வாளர்கள் இருக்கின்றனர். கே.சி.சிங், கே.சி.மிஸ்ரா, இராமதாஸ் ஆகியோர் மகாபாரதம், இராமாயணம் ஆகியவற்றை இனவரைவியல் நோக்கில் ஆய்வு செய்துள்ளனர். இனவரைவியல் என்பது சமகாலத்தில் உள்ள இனக்குழுக்களில் ஒரு சமூகத்தை தேர்ந்தெடுத்து அவர்களிடம் சென்று களப்பணி மேற்கொண்டு அவர்களது வாழ்வியலைப் பற்றி எழுதுவதாக அமைய வேண்டும். “இராமாயணம், மகாபாரதம், சிலப்பதிகாரம் உள்ளிட்டக் காப்பியங்கள் யாவும் அவை எழுதப்பட்ட காலத்தில் சமகாலத்தியப் பனுவல்கள் எனும் பண்பினைப் பெற்றிருந்தன. அவற்றை இன்றைய காலச் சூழலில் படிக்கும் போது அவை யாவும் வரலாற்று இனவரைவியலாக அமைகின்றன”[7] என்கிறார் பக்தவத்சலபாரதி. இலக்கியங்கள் அவை தோன்றிய காலத்தைக் கடந்து ஆய்வுக்கு உட்படுத்தும் போது அது வரலாற்றுத்தன்மையைப் பெற்று விடுவதாகக் கூறுகிறார் எனலாம். எழுதப்பட்ட இலக்கியங்கள் யாவும் ஒருவகையில் தகவலாளியாக அமைகின்றன என்றும் கூறுகிறார் “தமிழ்ச் செவ்வியல் இலக்கியம் ஒவ்வொன்றும் இனவரைவியல் பொருண்மைகள் நிறைந்த பண்பாட்டுப் பனுவலாகவே காணப்படுகின்றது. ஒவ்வொரு பனுவலும் தகவலாளியாக அமைவதால் அதனை இனவரைவியல் ஆய்வுக்கு உட்படுத்தலாம்”[8] என்ற கூற்றில் இதனைத் தெளியலாம். இவ்வாறு இனவரைவியல் ஆய்வினை நூல்களைக் கொண்டு செய்யும்; வழக்கம் மானிடவியலில் காணப்படுகிறது. குறிப்பிட்ட சமூகத்தின் பல்வேறு கூறுகளுள் அச்சமூகம் பற்றிய புலப்பெயர்வுகள், நிலையான குடியமைவுகள் ஆகியன பற்றியும் எடுத்துக் கூறப்படும். அத்தகைய தகவல்கள் அவர்தம் வரலாறாக அமைய ஏதுவாகிறது.

குடிகளின் தோற்றமும் சமூகஅமைப்பும்

மக்கள் தாம் வாழும் பகுதியில் நிலையான குடியிருப்புகளை ஏற்படுத்திக் கொண்டு குழுவாக வாழத் தொடங்கிய நிலைதான் குடும்ப அமைப்பு தோற்றம் பெற்ற சூழல் ஆகும். ஒவ்வொரு சமூகத்திலும் ஒவ்வொரு குடும்ப அமைப்பு இயக்கம் பெறுகிறது. சமூகத்தில் பல்வேறு குடிகள் இணைந்து வாழ்கின்றனர். அவர்களுக்குள் வெவ்வேறு வகையில் உறவுகள் காணப்படும். மணவுறவுகள் மட்டும் இனத்திற்குள்ளேயே நடைபெறுவதாக அமைந்திருக்கும். வேற்றினத்தவருடன்

மணவுறவை வைத்துக் கொள்ளாத வகையில் அகமண உறவுகளைக் கொண்ட சமூகங்களாக தமிழ்ச் சமூகங்கள் உருமாறியுள்ளன. குடி என்பது குழுவாக வாழும் மக்கள் கூட்டத்தினை குறிப்பதாக அமைகிறது. "சங்க இலக்கியத்தில் குடி என்ற சொல் குடும்பம் அல்லது குடியிருப்பு என்ற பொருளில் பொதுவாகக் கையாளப்படுகிறது.... ஆதியில் குடியிருப்பைக் குறித்த இச்சொல் (குடும்பமும் குழுவும் குடியிருப்புடன் பொருந்தியவை) கால வளர்ச்சியில் சொற்பொருள் மாறுதலடைந்து குடியிருப்பில் உள்ள மக்களின் ஒழுக்க வடிவங்களைச் சுட்டுவதாக மாறியிருப்பதும் சாத்தியமே" [9] என குடி என்பதற்கு விளக்கம் அளிக்கிறார் கா.சிவத்தம்பி. குழுவாக, கணமாக வாழ்கின்றவர்களே குடிகளாகவர். தமிழகத்தில் வாழும் குடிகள் எண்ணிறந்தவர்களாக இருக்கின்றனர். ஐந்நில பாகுபாட்டில் வாழ்ந்த மக்கள் ஐந்து குடிகளாகக் கூறப்பட்டனர். ஆனால் அந்நிலை முற்றிலும் மாறியிருக்கின்றமையைக் காணமுடிகிறது. வெவ்வேறு பெயரில் அழைக்கப்படும் சாதியினர் குடிகளாகக்கொள்ளத்தக்கவர்களே ஆவர். குடிகள் பன்னெடுங்கால வரலாற்றுத் தொடர்ச்சியை உடையவர்களாக இருப்பார்கள். அவர்களின் பண்பாடு, நாகரிகம் ஆகியன மாறுதலுக்கு உட்பட்டிருந்தாலும் இயக்கப் போக்கில் சில குடிகள் வளர்ச்சி தேங்கிய நிலையில் காணப்படும்.

குறிப்பிட்ட சூழலில் வாழும் மக்கள் தாம் வாழும் சூழலைப் பற்றிய அறிதலை உடையவர்களாக இருந்தாலும் அவர்களுக்குள் வழிவழியாகக் கடத்தி வரப்படும் பல்வேறு தொன்மங்கள் அவர்தம் வரலாற்றை உட்செரித்தனவாகக் காணப்படும் எனலாம். இனக்குழுக்களின் வரலாறுகள் யாவும் பல்வேறு வடிவங்களில் காணப்படும். அவற்றை இலக்கியமாகவோ, நிகழ்த்துக் கலைகளாகவோ நிகழ்த்தி வருவர். இனக்குழுக்களின் வரலாற்றுத் தகவல்களை தோற்றக் கதைகள், இடம்பெயர்வுக் கதைகள், தொன்மக் கதைகள், வரலாற்று நிகழ்களை அடிப்படையாகக் கொண்ட கதைகள் எனப் பகுத்துக் கொள்ளலாம். குடிகளின் தோற்றக் கதைகள் என்பவை மனித இனத் தோற்றத்தோடு தொடர்புபடுத்திக் கூறப்படுகின்றனவாக அமையும். கடவுளோடும், கடவுளரின் வாகனங்களோடும் இயற்கைப் பொருட்களோடும் தம்மைத் தொடர்புபடுத்திக் கொள்ளும் நிலையினைக் காணமுடிகிறது.

இனக்குழுக்கள் மற்றும் வரலாறுகள்

இனக்குழுக்களின் வரலாறுகள் ஒவ்வொரு பகுதியிலும் அவர்கள் வாழ்ந்த சூழலில் ஏற்பட்ட மாற்றங்களை உள்ளடக்கியனவாகக் காணப்படுகின்றன. சமூக, பொருளாதார மாற்றங்கள் நிகழும் போது இனக்குழுக்கள் அக்காலகட்டத்தை நினைவில் வைக்கும் பொருட்டு அதனை சொல்கதைகளாக கூறி வழிவழியாகக் கடத்தப்படுகின்றன. அவ்வாறு கடத்தப்படுகின்ற வரலாற்று நிகழ்வுகள் உறுதியான

உண்மையாகவும், தர்க்க முறையிலும் இருப்பதில்லை. இனக்குழுக்களின் பழக்கங்களில் ஏற்படுகின்ற மாற்றங்களுக்கு அரசியல், பொருளாதாரச் சூழல்கள் காரணமாக அமைகின்றன. அக்கதைகளில் தலைமைப் பாத்திரங்களின் செயல்பாடுகளில் மீவியல் தன்மைகள் ஏற்றப்பட்டு மக்களிடம் புழங்குகின்றன. ஒவ்வொரு இனக்குழுவும் தனக்கான பரிணாமத்தைக் கொண்டு இலங்குவதைக் காணமுடிகிறது. சமயப் பரவல், சமூக மாறுதல், ஊடு பண்பாடுகள், ஆதிக்கத்திற்கு எதிரான தன்மை ஆகியனவற்றை உள்ளடக்கிய கதைகள் வரலாற்றுக் கதைகளாக இனக்குழுக்களிடம் வழங்கி வருகின்றன. அக்கதைகளைக் கொண்டே அச்சமூகத்தின் தலைமுறை தலைமுறையாக தம் தொடக்கத்தையும் இனி தாம் செல்ல வேண்டிய பாதையையும் நிர்ணயிக்கின்றனர். இதனை இனமரபுக் கதைகள் என்றும் கூறலாம். இனமரபுக் கதைகள் யாவும் மேலோர், கீழோர் முரண்களைப் பேசுவனவாக அமைகின்றன. அதாவது ஆதிக்கத்திற்கு எதிரான குரல்களை வெளிப்படுத்தும் போது நிகழும் பிரச்சினைகளாக காணப்படுகின்றன. "ஒரு சாதியின் அடித்தளப் பிரிவினர் மேலோர் குழுவின் மேலாண்மையை வேறுவழியின்றி ஏற்றுக் கொண்டாலும் வாய்ப்பு நேரிடும் போது தனது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். சில நேரங்களில் இவ்வெதிர்ப்புணர்வு கிளர்ச்சியாக உருவெடுத்து வெற்றியடையவும் செய்யும்" [10] என்று இதனைக் குறிப்பிடுகிறார் ஆ.சிவசுப்பிரமணியன். தமிழ் நாவல்களில் இது போன்ற இனமரபுக் கதைகளில் ஆதிக்கத்திற்கு எதிரான அடித்தள மக்களின் எதிர்ப்புக் குரல்களே பெரிதும் பதிவு பெறுகின்றன. பழங்காலத்தில் அரசர்களையும், அதற்கு முன்னால் கடவுள்கள், அரக்கர்களையும், நவீன காலத்தில் காலனியத்தையும் எதிர்த்த மக்களின் போராட்டங்கள் ஒரே ஊருக்குள் சாதிய அடிப்படையிலும் எதிர்ப்பதாக அமைந்திருக்கின்றன. நுண்வெளிக்கிரகணங்களிலும் இதைப் பார்க்க முடியும்.

சு.வேணுகோபாலின் நுண்வெளிக் கிரகணங்கள்

இந்நாவலில் ஒக்கலிகர்களின் பூர்விகக் கதைகள் கூறப்படுகின்றன. காப்புக்குல ஒக்கலிகர்கள் கர்நாடகாவிலிருந்து புலம்பெயர்ந்து வந்தவர்கள் ஆவர். அங்கே நடந்த இஸ்லாமிய படைபெயடுப்பிற்குப் பயந்து பெருந்தொகுதியாகப் புலம்பெயர்ந்து இன்றைய தேனிமாவட்ட பகுதிகளில் குடியேறி குலம் குலமாகத் தழைத்துப் பெருகியதை உள்ளீடாகக் கொண்டிருக்கிறது நுண்வெளிக்கிரகணங்கள்.

ஒக்கலிகர்களின் இசை, மொழி, முரண், கலகம்

ஒக்கலிகர்களின் பேச்சுக்களில் கன்னடமொழியும் கலந்து வருவது இயல்பாக இருக்கிறது. தங்கள் குலத்தொகுதிகளை தங்களின் கன்னட மொழிவழியாக ஒருங்கிணைத்துக் கொள்கின்றனர். மற்றவர்களிடமிருந்து தங்களை வேறுபடுத்திக் கொள்கின்றனர். காப்புக்குலத்தில் பல்வேறு பிரிவுகள் இருக்கின்றன. சித்தையன்

கோட்டை முன்பு ஏழுவிலம்பட்டி. ஆற்றுத் தண்ணீரை தேக்கி வைப்பதற்காக ஒட்டர்கள் குளம் வெட்டுகிறார்கள். அக்குளம் வெட்டினால் கவுண்டர்களுக்கு நீர்த் தேவைக்கு குறைவு ஏற்படும் என்பதால் அதைத்தடுக்க வேண்டும் என சித்தையா கவுடர் தனக்கு ஆதரவாக சக்கிலியர்களைப் பெருமளவில் திரட்டிக் கொண்டு ஒட்டர்கள் குளம் வெட்டும் இடத்திற்குச் சென்றதும் கலகம் செய்து விட்டனர். சக்கிலியர்கள் எதிரிகளை கல்லை துண்டில் முடிந்து கொண்டு அடித்தார்கள். ஜமீன் ஆட்கள் விரட்டப்பட்டதில் கவுள்தார் சித்தையாவுக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. ஜமீனுக்கும் சித்தையாவுக்கும் பேச்சு வார்த்தை நடந்தும் ஒன்றும் காரியமாகவில்லை. சித்தையா கவுடரிடம் தண்ணீர் விடுவதில்லை என்பதை அழுத்தமாக கூற ஆட்சியர் ஜான் மார்செல்லைப் பார்த்தால் காரியமாகும் எனக் கூற ஜான் மார்செல்லை சித்தையா கவுடர் பார்க்கப் போகிறார். பிரச்சினை பெரிதாக ஜமீன் ஒட்டர்களையும் தொம்பர்களையும் பெருமளவில் அனுப்பி வைக்க சித்தையா கவுடர் சமாளித்து விடலாம் என்று கூறினாலும் அவர்களின் எண்ணிக்கை மிகுதியாக இருக்கவே ஆலவட்டக் கவுடர் சித்தையாவிடம் இறந்தவர்போல நடிக்கச் சொல்லி தப்புவதற்கு வழி சொல்கின்றான். அவ்வாறே செய்ய கௌல்தார் இறந்து போனதாக சத்தம் எழும்பியதும் ஒட்டர்களும் தொம்பர்களும் ஓடி விட்டனர். பின்பு ஆட்சியர் ஜான் மார்செல் அம்மாச்சி குளத்துக்கு தண்ணீர் பாத்தியம் இரண்டு நாள் என்று எழுதி விட்டுப் போய் விட்டார் (நுண்.57-60) என்று அம்மச்சி குளத்திற்குத் தண்ணீர் விடுவதற்கு நடந்த நிகழ்ச்சி கூறப்படுகிறது. இவர்களுடைய ஒவ்வொரு நிகழ்விலும் இசை இழைந்தோடுவதைக் காணமுடிகிறது. சாவானாலும், பூப்பானாலும் திருமணமானாலும், கொடையானாலும், விதைப்பானாலும், அறுவடையானாலும் உறுமிகள் முழங்குகின்றன. இந்நாவலில் கூறப்படும் இனமரபுக்கதைகள் யாவும் ஆதிக்கத்திற்கு எதிரான குரல்களாக வெளிப்படுகின்றன.

ஒக்கலிகர்களின் காவு கொடுத்தல் சடங்கும் சாபமும்

கவுள்தார் மேல் கலவரத்தில் இரண்டு பேரை கொன்ற வழக்கு போடப்பட்டது. பிடியாணை கொடுத்திருந்தார்கள். அதிலிருந்து தப்பிக்க தேவம்மையிடம் மகன்களில் ஒருவனை காவு கொடுக்க வேண்டும் என்று கூறுகிறார் கவுள்தார். தேவம்மை அதற்கு இசைவு மறுக்கிறாள் (நுண்.ப.67). பின்னர் இன்னொரு மனைவியான சீனியம்மாவிடம் சென்று தனக்கான ஒரு மகனைக் காவு கொடுக்கக் கேட்கிறார். அவள் சம்மதம் சொல்கிறாள். அவளுடைய மகன்களில் இரண்டாவது மகனான கதிரையாவை அனுப்பச்சொல்கிறார். அவளும் அவனை காவலுக்கு அனுப்புவது போல அனுப்புகிறாள். ஒச்சத் தேவனை வைத்து கதிரையாவை வெட்டிக் கொலை செய்கிறார். ஒச்சத் தேவனும் கதிரையாவும் நண்பர்கள் போலவே பேசிக் கொண்டிருந்தார்கள். அவனுக்கு உணவு கொடுத்தும் உபசரித்தான். சாவின் போது

ஒச்சத்தேவனைப் பார்த்து கதிரையா சாபம் தருகிறான் "பாதகம் பண்ணுன ஆளு வம்சமில்லாம அழியணும். இப்ப என் தல நடுங்குறது மாதிரி வீதி பூராம் நடுங்கியே சாகணும்' வாய் குழறி சாபம் கிளம்பும் போதே அடுத்த வெட்டில் தலை துண்டானது" (நுண்.ப.80) என்று அமைகிறது. இந்தக் கொலை பழியினை ஜமீன்தார் மீது போட்டு விட்டார். இதனால் ஜமீன்தார் நெருக்கடிக்குள்ளாகிறார். ஆக கன்னடியர்களின் பெயர்வும் நிலைநிறுத்தலும் பல்வேறு இன்னல்களுக்கிடையேதான் தொடங்கி இன்று இனமாகத் திரண்டதை இச்சம்பவங்கள் நாவலில் காட்டுகின்றன.

ஒக்கலிகர்களின் தர்மக்கட்டு எனும் பண்பாட்டுவரைவு

திருமண முறைகளில் அண்ணன், தம்பி ஆகியோருக்கு ஒரு பெண் வாழ்க்கைப்படுதலாக மூனுபளவினரில் இருப்பதை நுண்வெளிக் கிரகணங்கள் நாவல் சுட்டுகிறது. அண்ணன் இறந்து போனால் தம்பி திருமணம் செய்துகொள்வது வழக்கம். தம்பியும் இறக்கும் போது அதற்கு அடுத்தத் தம்பி மணம் முடித்து வாழ்க்கை நடத்துவதும் அவனும் இறந்து போகும் போது அவள் விதவையாக காலத்தை கடத்த வேண்டும். இந்நிலைக்குப் பெயர்தான் தர்மக்கட்டு. மூனுகட்டு என்றும் இதனை அழைக்கின்றனர். ஒக்கலிகர்களில் உள்ள பிரிவுகளில் மூனுபளவினர், குஞ்சடிகா ஆகியோர் கீழானவர்களாகக் கருதப்படுகிறார்கள். மூனுபளவினருக்கு குஞ்சடிகா பிரிவினர் கீழானவர்களாக இருக்கிறார்கள். மூனு கட்டு என்பது மூனுபளவினர்களிடம் இருந்த மணமுறையாகும். அதனை விரும்பாததால்தான் அவர்களை அருவருப்புடன் காணும் போக்கு ஒக்கலிகர்களிடம் இருக்கிறது. காப்புக் குலத்தில் அவர்கள் தாழ்ச்சி உடையவர்கள். ஒரு பெண் மூன்று தாலி ஒரே வீட்டில் எடுத்து வாழ்வதுதான் அது. எனவே அவர்கள் மூனுபளவினர் வகையறா எனப்பட்டனர். அக்குபாரி திருமணம் பற்றி இதில் குறிப்பிடப்படுகிறது. அக்குபாரியின் கணவன் பிளேக்கில் இறந்து போக அவளுடைய கொழுந்தன் பைரவனுக்கும் அவளுக்கும் திருமணம் அவன் மிகச் சிறியவன். பதினொரு வயது. பைரவன் மழையில் நனைந்து ஜன்னி வந்து இறந்து போக மீண்டும் வளையல் உடைக்கிறாள். அடுத்த இளையவன் நல்லகாமு அவளுக்குத் தாலி கட்டுகிறான். நல்லதம்பி இறந்து அடுத்து ஒரு தம்பி இருந்தால் திருமணம் நடக்காது. அந்நிலையில் அவள் விதவைக் கோலத்தையே வாழ்வில் கடைபிடித்தாக வேண்டும். ஆயின் அக்குபாரியோடு தர்மகட்டு முடிந்து விட்டதாகக் கூறப்படுகிறது. "தர்மக்கட்டு அவர்களிடம் அக்குபாரியோடு நின்று விட்டதா? அதற்கடுத்து பொம்மம்மாள் வாழ்ந்த அம்பத்தேழு ஆண்டுகளில் தர்மக்கட்டை மூனுபளவினருகளிடம் பார்க்கவில்லை. இருந்தாலும் குஞ்சடிகள் அவர்களை எடுத்தெறிந்துதான் பேசுகிறார்கள். மூனு பளவினரின் உள்சரடு உருவிக் கொண்டது என்றோ நிகழ்ந்துவிட்டது" (நுண்.ப.159) இதில் தர்மக்கட்டு என்பது இரண்டு முறை விதவையாகி விட்ட பெண்ணை மீண்டும் இறைவனோடு திருமணம் செய்து

வைப்பதாகக் கூறப்படுகிறது. என்றோ நிகழ்ந்த இந்நிகழ்வினைக் கொண்டு ஒரே சாதிக்குள் ஏற்றத் தாழ்வு கற்பிக்கும் நிலை காணப்படுகிறது.

காப்புகுலத்தின் தாலி பண்பாடு

நுண்வெளிக் கிரகணங்கள் நாவலில் ஒக்கலிகர்கள் தாலி அணிய மாட்டார்கள் என்பதற்குக் கூறப்படும் தொல்கதையில் மன்னன் விளைச்சலில் பங்கு கேட்பதும் அதைத் தருவதற்கு காலந்தாழ்த்துவதும் இறுதியில் மொத்த விளைச்சலும் கொடுத்தும் வரி நிலுவையாக இருக்க பெண்கள் தம் பொன் நகைகளையும் கொடுத்தும் வரி நிலுவை தீராததால் தாலியையும் கழற்றித் தந்து விடுகின்றனர். அதிலிருந்து பெண்கள் தாலி அணிவதில்லை என்று கூறப்படுகிறது. "பிஞ்சுப் பூசணி, காய்ப் பூசணி, பழுப் பூசணிக்காய், மூக்காணியில் இறுக்கிப் பிடித்து இழுத்து பின் தோட்டக்காரனாகி ராஜாவாகி, ஆடிய ஆட்டங்கள், பின்னர் மொத்தப் பூசணிகளையும் கொடுத்தும் தசரதன் விதித்த வரிக்கு ஈடாகாமல் பெண்கள் தங்கள் பொன்நகைகளையெல்லாம் கழற்றித் தருவார்கள். அப்போதும் வரி நிலுவை இருக்கவே தாலியையும் கழற்றித் தந்து விடுகிறார்கள். அதிலிருந்துதான் காப்புகுலம் தாலி அணிவதில்லை என்று கதை போகும்" (நுண்.ப.73) என்று தொல்கதையின் ஊடாக அவர்கள் தாலி அணியாமைக்கான வரலாறு கூறப்படுகிறது. நம்புவதற்கிடமில்லாத தன்மையிலிருந்தாலும் அரச அதிகாரத்திற்கு உட்பட்டு அவர்கள் ஒடுக்குமுறைக்கு உள்ளான நிகழ்வை அடிப்படையாகக் கொண்டு இக்கதைப் புனையப்பட்டிருக்கலாம்.

ஒக்கலிகர்களின் தொழில்கள்

உழவுத் தொழிலில் ஒக்கலிகர்களின் நிலங்களில் ஈடுபடக் கூடியவர்கள் பெரும்பாலும் அடித்தட்டு மக்களாகக் குறிப்பிடப்படுகின்றனர். ஒக்கலிகர்களும் இத்தொழிலில் ஈடுபடுகின்றனர் திம்மைய கௌடரின் நிலத்தில் பணி செய்யும் காளியப்பனை வசைபாடிக்கொண்டிருந்தார் திம்மையகவுடர். "வருசமெல்லாம் உழுகுறான் தொரவு எடுக்கத் தெரியல' வரப்பில் நின்று காளியப்பனை திம்மைய கௌடர் திட்டினார். அத்தக் கூலிக்கு ஆள் வரமாட்டேன் என்கிறார்கள். களைக்கி காண்ராட், அறுப்புக்கு காண்ராட், நடவுக்கு காண்ராட்டாகி விட்டது. பாவம் சௌடம்மா... அத்தக் கூலிக்கு வெள்ளன ஆள் கூப்பிடப் போனதால் கிடைத்தார்கள். சாயந்திர வேளை எப்போதும் மந்தம்தான். கட்டி ஒழவு விழுந்துவிட்டது. மொளக்கம்பால் கட்டிகளை உக்காந்த வாக்கில் நொறுக்குகிறார்கள். மழை விழுந்திருந்தால நில கலகலப்பு கண்டிருக்கும். மழை விழுகுறது என்னெக்கி ரெடி பண்ணி வைக்கிறது என்னிக்கி என்றுதான் கட்டி கட்டியாக பேத்துப் போடுகிறார்கள். மாடுகளுக்குப் புண் விழாமல் இருக்க கழுத்தில் தண்ணி அடித்து விடுகிறார்கள்.

தொரவ வலங்கையில எடுத்துப் போடுங்கடான்னா எடப்பக்கம் போட்டு அருக பின்னத்தி ஏர் மூடிட்டுப் போகுது' என்று கோளாறு சொல்கிறார்" (நுண்வெளி.ப.48) என்னும் பகுதியானது கௌடரின் நிலத்தில் உழவு நடப்பதும் அதில் வேலை செய்யும் கூலித் தொழிலாளர்களை அவர் வேலை வாங்குவதும் கூறப்படுகிறது. சௌடம்மாள் அத்தைக் கூலிக்கு ஆள் கூட்டி வந்து வேலை செய்கிறாள். அத்தக் கூலிக்கு ஆள் கிடைப்பதும் அரிதாக இருப்பதாகக் கூறப்படுகிறது. எனவேதான் உழவுப் பணிகளை அவர்களே செய்ய முயற்சிக்கிறார்கள். காளியப்பனின் உழவு ஓட்டுவது சரியில்லை என்று கூறி தானே சாலைப் பிடித்து உழவு ஓட்டுகிறார் திம்மைய கௌடர் "ஒரு சாலாச்சும் நூல் பிடிச்ச மாதரி விழுகுதா?' விலகுடா நான் அடிக்கிறேன் பாரு' கோபத்தில் மேழியைப் பிடித்து அமுக்குகிறார். மேழி கிடுகிடுவென ஆடுகிறது. 'நட்டைக் கூட சரிபண்ணத் தெரியவில்லை' ஏர நிறுத்தி லூசான நட்டை இறுக்கினார். இறுக்கமான ஏரை மாடுகள் முக்கி இழுத்தன. ஏர் உழவில் தூக்கி அடிக்க அவர் தொங்கு சதை ஆடுகிறது. சால் கச்சிதமாக விழுகிறது. மறு சுற்றில் பட்டான் பிடித்துக் கொள்கிறான். வரப்போரம் சுத்துக்கால் வெட்டிக் கொண்டிருந்த அசோக்குமார் கிட்ட உழவு வழியாக ரங்கசாமி நடந்து வந்தார். 'சேற அடிடான்னா கரைய கரைய உழுகுறீங்க. அருகு பெறகு எங்குட்டு அத்துப் போகும்' முனங்கிக் கொண்டார் சுத்துக்கால் வெட்டுவதை நோட்டமிட்டார்." (நுண்வெ.ப.48) என்று உழவுத் தொழிலில் நுணுக்கமான செயல்பாடுகள் சுட்டப்படுகின்றன. வயல்களில் உரிய பருவத்தில் மழை, பெய்யும் போது உழவுத் தொழிலை மேற்கொள்பவர்கள் இயல்பாக அத்தொழிலுக்குத் தயாராகி விடுகிறார்கள் என்பதைக் காணமுடிகிறது. வயல்காரர்கள் பணியாட்களின் வேலையில் ஒருபோதும் திருப்தி கொள்ளமாட்டார்கள். ஏதேனும் குற்றம் சொல்லிக் கொண்டேதான் இருப்பார்கள். அந்த வகையில்தன் திம்மைய கௌடர் பட்டனையும் காளியப்பனையும் வேலை சொல்லிக் கொண்டும் அவர்களது வேலை சரியில்லை என்று சொல்லிக் கொண்டு இருக்கிறார். அசோக்குமார் சுத்துக்கால் வெட்டுபவனாக இருக்கின்றான். சொந்த வயலில் பணி செய்வதும் இயல்பான நடவடிக்கையாகக் காணப்படுகிறது.

மழை பெய்யும் போது கூலியாட்கள் கிடைப்பது அரிதாகி விடும் அப்போது அவர்கள் தங்கள் கூலியையும் உயர்த்திக் கொள்கிறார்கள் எனக் காணமுடிகிறது. அடித்தட்டு மக்களே கூலியாட்களாக ஒக்கலிகர்களின் வயல்களில் பணி செய்கின்றனர் என்பதைக் காணமுடிகிறது. "மழை கொட்டோ கொட்டென்று கொட்டி விட்டது. விவசாய வேலைகள் ஜரூராய் நடந்தன. தனகோபால் அண்ணனோடு பஞ்சாரத்தைத் தூக்கிப் போனான். கூலியாட்கள் கூலியை ஒரே நாளில் இரண்டு ரூபாய் ஏற்றி விட்டார்கள். நாளுக்குப் பதினாலு ரூபாய் அண்ணி குஞ்சம்மாவை சௌடம்மா சத்தம் போடுகிறாள் 'நீதான் கூலியை ஏத்துற பன்னெண்ட பதினாலா

ஆக்கிட்ட' நாலு மாசமா வேலையில்லைன்னா யாரு படியளக்குறா ஒன் தோட்டத்துக்கே வல்லசாமி வேற சம்சாரிக்குப் போறேன் என்று குஞ்சம்மாள் பதிலுக்குச் சொல்லி விட்டு போய் விட்டாள்" (நுண்வெளி.ப. 96) என்றுகூலிக்காரர்களான தலித்துக்கள் தங்கள் பணிக்கான கூலியை ஏற்றுவதை நிலத்துக்காரர்களால் ஏற்றுக்கொள்ள முடியாத நிலை கூறப்படுகிறது. உழவு நேரத்தில் கூலியாட்களுக்கு கடும் பற்றாக்குறை ஏற்படும் அப்போது அவர்கள் வைத்ததே கூலி என்ற நிலையினை இதில் காணமுடிகிறது.

மழை பெய்து மரவட்டான்குளம் நிரம்பி விட்டால் வயலுக்குத் தண்ணீர் பாய்ச்சும் முறை வந்து விடும் காளியப்பன் மண்வெட்டியுடன் வாமடைக்கு வந்து தண்ணீர் பாய்ச்சுவதற்காக வருகிறான். "மண்வெட்டியைக் காளியப்பன் வாமடையிலேயே வைத்திருந்தான். அவனுக்கு எவ்வளவு சொன்னாலும் காதில் ஏறுவதில்லை. வாமடையை கானாறு மாதிரி வைக்க வேணாம். தண்ணி தேங்கும். பாத்திக்குள்ள எட்டி ஒரு மம்பட்டி மண்ணெடுத்து வாமடைக்குப் போடென்றாலும் கேட்பதில்லை" (நுண்வெளி.ப. 230) என்று தண்ணீர் பாய்ச்சுவதற்காக காளியப்பன் வருவதும் அவனது வேலையை வழக்கம் போல் குறைசொல்லி தான் பார்ப்பதும் நடக்கிறது. முதலாளிகளின் வயல்களில் வேலை பார்க்கும் காளியப்பன் தனக்கு கூலி உயர்த்திக் கேட்ட போது அவனை கடுமையாக வசைபாடுகிறார்கள். கட்டி வைத்து அடிக்கவும் செய்கிறார்கள். திம்மையாவும் ரங்கசாமியும் அவனை அடித்து காயப்படுத்துகிறார்கள். காயத்ரியும், தங்கமும் அதைக் கண்டு மனம் பரிதவிக்கிறார்கள். இத்தனை வருடங்களாக அவன் 1500 ரூபாய்க்குக் கூட வேலை செய்யவில்லையா என்று காயத்ரி கேட்கிறாள். அவளை அதட்டி உள்ளே போகச் சொல்கிறார் திம்மையா பின்பு அவனை விட்டு விடுகிறார்கள். காயத்ரி காளியப்பனை மறுநாள் தீபாவளியன்று பார்த்து நலம் விசாரித்து வருகிறாள். உழைப்பவனுக்கு உரிய கூலியைத் தராதவர்களாக நிலத்துக்குச் சொந்தக்காரர்கள் இருக்கிறார்கள் என்பதை இதில் காணமுடிகிறது. இவ்வாறு நுண்வெளிக் கிரகணங்கள் நாவலில் அடித்தட்டு மக்களான தலித்துகள் ஒக்கலிக கௌடர்களின் நிலங்களில் பணி செய்வதும் உழவு நாட்களில் அவர்களுக்கு பற்றாக்குறை ஏற்படுவதும் கூலி உயர்வு கேட்பதும் அதை ஏற்க மறுப்பதுமான சூழல்கள் சுட்டப்படுகின்றன.

முடிவுரை

தமிழ்ச் சமூகமானது பல்வேறு இனக்குழுக்களைக் கொண்டதாகும். சங்க காலத்தில் நானிலம் என்றும் ஐந்திணை என்றும் கூறப்பட்டு அதன் அடிப்படையில் மக்கள் குழுக்களும் வகைப்படுத்தப்பட்டதனைக் காணலாம். ஒவ்வொரு இனக்குழுக்களும் வேறுபட்ட வாழ்வையும் வரலாற்றையும் கொண்டவர்கள்

என்பதையும் தமிழக வரலாற்று வரைவியல்கள் கூறுகின்றன. தமிழ்ச் சமூகத்தில் மக்களின் வாழ்வாதாரத்திற்காக புலம்பெயர்தல் என்பது காலந்தோறும் நிகழ்ந்திருக்கின்றன. அவ்வாறு இடம்பெயர்ந்து, காலந்தோறும் வந்திருக்கும் நிலையில் ஒவ்வொரு சமூகமும் தனக்கான ஒரு வரலாற்றை தன் சொல்லாடல்கள் வழி பின்பற்றி வருவதை நுண்வெளிக் கிரணங்கள் நாவல் அறிந்து கொள்ள முடிகிறது.

தொகுப்புரை

- இனக்குழுக்களிடம் வரலாறுகள் சொல்கதைகளாக மக்களிடம் புழங்குகின்றன. வரலாற்றுச் செய்திகளை வெகுமக்களின் பல்வேறு வழக்காறுகள் மூலம் வருவித்துக் கொள்ளும் வகையில் வரலாற்றெழுதியல் முறைகள் மாறியிருக்கின்றன. அதில் மானிடவியல் ஆய்வுகள் இனக்குழுக்களின் வரலாற்றைக் குறித்த கருத்தைக் கொண்டதாகும்.
- சு. வேணுகோபாலின் நுண்வெளிக்கிரகணங்கள் காப்பிலிக ஒக்கலிகர்களின் புலம்பெயர்ந்து தென் தமிழ்நாட்டில் குடிகளாகப் பரவி வாழ்ந்து வருகின்ற வரலாறுகளைக் கதைக் கொத்தாக எடுத்துரைத்துள்ளது.
- தொன்ம வரலாற்றுக் கதைகள் வழி ஒக்கலிகர்களின் இனவரலாறு சொல் கதைகளாக அடுக்கி வைக்கப்பட்டுள்ளன.
- வேளாண்மை வாழ்வும் அதன் வீழ்ச்சிகளையும் ஒக்கலிகர்கள் தேனி மாவட்ட செங்காட்டுப் பகுதிகளில் எதிர் கொண்டு வரும் சமகால வாழ்வியல் நெருக்கடிகளையும்; நாவல் கவனப்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.
- தனது வரலாற்றைப் பற்றி மூதாதையர் சொன்ன கதைகளின் ஆழ்மனப் பதிவுகளை வெவ்வேறு சம்பவங்களாக மாற்றியிருக்கிறது நாவல்.
- ஒக்கலிகர்களின் வாழ்வியலின் உச்சங்களை மட்டுமல்ல வீழ்ச்சிகளையும் நாவல் அடுக்கியுள்ளது சிறப்பு. ஒக்கலிகர்கள் தலித் மக்களிடம் நடந்து கொள்ளும் மீறல்களையும், பெண்களிடம் காட்டும் ஆணின் வன்முறைகளையும் நாவல் காட்டடியுள்ளது.
- நுண்வெளிக் கிரகணங்கள் நாவலில் வரலாற்றுத் தன்மையுள்ள கதைகள் நம்பிக்கைகளாகவும், வாழ்வியலோடும் இணைந்தவையாக அமைகின்றன.
- சுதந்திரத்திற்கு முந்தைய காலத்திலிருந்து புலம் பெயர்ந்து வந்தவர்களாக காப்பிலியர்கள் இருந்தனர். சித்தையா கவுடருக்கு முன்னால் அவருடைய தந்தை, பாட்டனார் ஆகியோரின் வம்சத்திலிருந்து அவர்களுடைய கதை சொல்லப்படுகிறது. அதன் வழி இனவரலாறு கட்டமைக்கப்படுகிறது.

முதன்மை நூல்

சு.வேணுகோபால், 2017, நுண்வெளிக்கிரகணங்கள், தமிழினி, சென்னை - 51.

துணைநூற்பட்டியல்

1. ஆ.சிவசுப்பிரமணியன், 2016, அடித்தள மக்கள் வரலாறு, ப.5, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிமிடெட், சென்னை- 96.
2. ரணஜித் குஹா, சூசிதாரு, 2016, தேஜஸ்வினி நிரஞ்சனா; விளிம்பு நிலை மக்களின் போராட்டங்கள், ப.39, காலச்சுவடு, நாகர்கோயில் - 01.
3. நா.வானமாமலை, 2007, தமிழர் வரலாறும் பண்பாடும், ப.39, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிமிடெட், சென்னை- 96.
4. டி.டி.கோசாம்பி, 2018, பண்டைய இந்தியா, ப.47, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிமிடெட், சென்னை- 96.
5. சு.சண்முகசுந்தரம், 1991, தமிழில் வட்டார நாவல்கள், ப.6, காவ்யா,பெங்களூர்.
6. நொபுரு கரோஷிமா, 2014, வரலாற்றுப்போக்கில் தென்னகச்சமூகம், ப. 87, மொழிபெயர்ப்பு மையம், பொள்ளாச்சி 642 003.
7. பக்தவத்சலபாரதி, 2014, இலக்கிய மானிடவியல், ப.18, அடையாளம் பதிப்பகம், புத்தாநத்தம்,
8. மேலது, ப.21.
9. கார்த்திக்கேசு சிவத்தம்பி, 2010, பண்டைத் தமிழ்ச் சமூகம், ப.23, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிமிடெட், சென்னை- 96.
10. ஆ.சிவசுப்பிரமணியன், 2016, அடித்தள மக்கள் வரலாறு, ப.124, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிமிடெட், சென்னை- 96.